# 'புன்னகை வள்ளல் எம்.ஜி.ஆர்'

## நினைவுகள் 2000

Rs. 20/-





# புன்னகை வேந்தன்
## எம்.ஜி.ஆர் வரலாறு குறிப்பு

| | | |
|---|---|---|
| தோற்றம் | : | 17.1.1917 |
| பிறந்த இடம் | : | கண்டி (இலங்கை) |
| பெற்றோர்கள் | : | திரு. கோபாலமேனன் - சத்தியபாமா |
| உடன் பிறந்தவர் | : | திரு. எம்.ஜி.சக்ரபாணி |
| படித்த பள்ளி | : | குடந்தை (அணையடி பள்ளி) |
| படிப்பு | : | 3-ம் வகுப்பு வரை |
| கலை அனுபவம் | : | 7 வயது முதல் |
| நாடக அனுபவம் | : | 12 ஆண்டுகள் |
| திரை உலகில் நுழைந்த ஆண்டு | : | 1936 முதல் 1978 வரை (42 ஆண்டுகள் கலை சேவை) 134 படங்கள். |
| நாடகக் குரு | : | திரு. காளி என்.ரத்தினம், கந்தசாமி |
| முதல் வேடம் | : | பரதன் (1924) |
| நடந்த இடம் | : | புதுவை |
| முதல் படம் | : | சதிலீலாவதி (1936) |
| வேடம் | : | காவல்துறை அதிகாரி |
| 100-வது படம் | : | ஒளி விளக்கு |
| சொந்த படம் | : | 1. நாடோடி மன்னன் (1958) 2. அடிமைப்பெண் (1969) 3. உலகம் சுற்றும் வாலிபன் (1973) |
| தி.மு.க.வில் இருந்த ஆண்டுகள் | : | 1950 முதல் 1972 வரை |
| அ.தி.மு.க. தொடக்கம் | : | 1972 |
| பதவியேற்ற ஆண்டு | : | 04.07.77 |
| அரசியல் அனுபவனம் | : | 56 ஆண்டுகள் |
| முதல்வர் பதவி | : | 1977 முதல் 1987 |
| மறைவு | : | 24.12.1987 |

# புகழுக்குக் காரணம்

அது 1954-ம் வருடம் நெல்லை மாவட்டத்தின் சார்பாக பாளையங் கோட்டையில் தி.மு.க. மாநாடு நடந்தது. மாநாட்டில் இரண்டு நாட்களும் எம்.ஜி.ஆர் கலந்து கொண்டார்.

மாநாட்டில் இரவு எம்.ஜி.ஆரின் 'இன்பக் கனவு' நாடகம் இருந்தது. பகலில் மாநாட்டில் எம்.ஜி.ஆர் பேசினார். தி.மு.க. மேடைகளில் எம்.ஜி.ஆர். தோன்றுவது அது ஆரம்பகாலம் என்று சொல்லலாம். ஆனாலும் சுமார் ஒரு மணி நேரம் அரசியல் சம்மந்தமான சொற்பொழிவை நிகழ்த்தினார்.

உரையை முடிக்கும்போது, ''இத்துடன் என் உரையை முடிக்கிறேன். இவ்வளவு நேரமும் அமைதியோடு என் பேச்சை கேட்டதற்கு நன்றியைத் தெரிவிக்கிறேன். இதற்குமேலும் பேசுவதற்கு ஆசைதான் என்றாலும் பேசத் தெரிந்ததே இவ்வளவுதான் என்பதால் பேச்சை முடித்துக் கொண்டேன் என்று வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள்'' என்று கூறி முடித்தார்.

ஆரம்ப காலத்தில் இருந்தே இந்த அடக்கம் இருந்ததினாலேயே எம்.ஜி.ஆர் நிலையான புகழுடன் விளங்கினார்.

**- சின்னராசு, தினகரன்,**
வசந்தம் (31.12.95)

# " புன்னகை வள்ளல் எம்.ஜி.ஆர். நினைவுகள் 2000 "

# வெற்றி பெற வாழ்த்துக்கள்





## என்றும் உங்கள்
## புரட்சி தமிழன்
## சத்ய ராஜ்

## இரண்டாயிரத்தில் ஒருவன் இசை விழா சிறப்பு கண்ணோட்டம்

"உலகில் எந்த ஒரு நடிகருக்கும் இது போல் ஒரு மாபெரும் இசை விழா நடக்குமா! என்பது போல்; "புன்னகை வேந்தன் எம்.ஜி.ஆர் அவர்களின் 83-வது பிறந்த நாள் விழா சிறப்பாக நடந்து முடிந்தது".

"ஆயிரத்தில் ஒருவனுக்கு இரண்டாயிரத்தில் இசை விழா" என்ற கலை விழாவை தென்னிந்திய பண்பாட்டு மையமும், கியூகாம் எண்டர்டெய்ன்மெண்ட் நிறுவனமும் இணைந்து மிகச் சிறப்பாக இந்த விழாவை நடத்தின. தமிழக சினிமா வரலாற்றில் கலைவேந்தன் எம்.ஜி.ஆர் முடிசூடா மன்னனாகத் திகழ்கிறார் என்பதை நிரூபிக்கும் வகையில் இவ்விழா வெற்றிகரமாக நடந்தது.

இவ்விழாவின் ஒரு பகுதியாக 7.1.2000 முதல் 13.1.2000 வரை ஒரு வார காலத்திற்கு சென்னை, திருச்சி, தஞ்சை, மதுரை, திண்டுக்கல், திருநெல்வேலி, காஞ்சிபுரம், பாண்டிச்சேரி ஆகிய முக்கிய நகரங்களில் உள்ள திரையரங்குகளில் பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர் நடித்த இருபதுக்கும் மேற்பட்ட படங்கள் திரையிடப்பட்டன.

சென்னையில் பைலட், மேகலா ஆகிய இரு திரையரங்குகளில் கலை வேந்தன் படங்கள் திரையிட்டு இருந்தனர். இந்த இரு அரங்குகளிலும் ரசிகர்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. சென்னை மேகலாவில் 9.1.2000 அன்று ரசிகர்கள் திரையரங்குகளில் வைக்கப்பட்டு இருந்த மக்கள் திலகத்தின் 'கட்அவுட்'க்கு மிகப் பெரிய மாலை, பால் அபிஷேகம், தேங்காய், சூடம் என அமர்க்களப்படுத்தி விட்டனர்.

இவ்விழாவின் இறுதி நிகழ்ச்சியாக இசை விழா சென்னை ஐ.ஐ.டி. ஸ்டேடியத்தில் 17.1.2000 அன்று நடத்தப்பட்டது. இந்த இசை விழா நிகழ்ச்சியைக் கண்டு களிக்க நூறு ரூபாய், இருநூற்று ஐம்பது ரூபாய், ஐநூறு ரூபாய், ஆயிரம் ரூபாய் என்று கட்டணம் நிர்ணயிக்கப்பட்டு டிக்கெட்டுகள் வழங்கப்பட்டன. இருந்தாலும் பல்லாயிரக்கணக்கில் மக்கள் திரண்டு வந்து பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர் அன்றும் இன்றும் என்றும் மக்களின் செல்வாக்கைப் பெற்றிருக்கிறார் என்பதை எடுத்துக் காட்டுவதாக இருந்தது.

## ஒரு ஃப்ளாஷ் பேக்

மக்கள் திலகத்தின் மேல் எனக்கு சிறுவயது முதல் பக்தி உண்டு. அவருடைய வள்ளல் குணம், நல்லொழுக்கம், மனிதநேயம் போன்றவற்றால் அவருக்கு இணையான ஒருவரை இன்று வரை எனக்கு வேறுயாரும் தோன்றவில்லை. நான் 15ஆவது வயது முதல் மக்கள்திலகத்தின் புகைப்படங்களையும் அவரைப்பற்றி வெளிவந்த புத்தகங்களையும் சேகரிக்க தொடங்கினேன். இன்று வரை அந்த பணி தொடர்கிறது.

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். சம்மந்தமான பத்திரிகை சேகரிப்பதில் தொடங்கிய எனது ஆர்வம் பிறகு அனைவருக்கும் பயன்படும் விதத்தில் 1931- முதல் வெளிவந்த சினிமாப் புத்தங்கள், தமிழ் சினிமா பாடல் புத்தகங்கள் ஆகியவைகளை சேகரிக்க தொடங்கினேன். என்னுடைய சேகரிப்பை அறிந்து பல நாளிதழ்கள், வார இதழ்கள் சிறப்பாக கட்டுரை எழுதின. ஸ்டார் டி.வி. 24.2.1999 அன்று சிறப்பு செய்தியாக என்னுடைய சினிமா புத்தக சேகரிப்பைப் பற்றி செய்தி ஒளிபரப்பு செய்ததுடன் 'கின்னஸ்' புத்தகத்தில் இடம் பெற வாழ்த்து கூறியது.

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களைப் பற்றி நான் சேகரித்த விவரங்களை 'கண்காட்சி'யாக நடத்த வேண்டும் என்று அதற்கான முயற்சியில் ஈடுபட்டு கொண்டிருந்தபோது தான் இரண்டாயிரத்தில் ஒருவன் இசைவிழா குழுவினர் என்னை அழைத்து இசை விழா நடக்கும் இடத்தில் 'கண்காட்சி' அமைக்கும்படி கேட்டுக் கொண்டனர். ஆனால் போதிய இடம் வசதி இல்லாததால் என்னுடைய சேகரிப்பில் கால் பங்கு தான் 'கண்காட்சி' அமைக்க முடிந்தது. நூறு ரூபாய் டிக்கெட்டில் அமர்ந்து பார்த்தவர்களுக்கு மட்டும் தான் இந்த கண்காட்சியை பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது. இனி இசைவிழாவுக்கு வருவோம்.

# "புன்னகை வள்ளல் எம்.ஜி.ஆர். நினைவுகள் 2000"

மக்கள் திலகம் மறைந்து பதி மூன்று ஆண்டுகளாகியும் அவர் மக்களிடம் பெற்றிருக்கிற செல்வாக்கை யாராலும் எட்டிப் பிடிக்க முடியவில்லை என்பது தான் உண்மை.

இந்த இசை விழாவில் மியூசிக் பாக்டரி குழுவினரின் நடனமும், நடந்தன. தஞ்சை ரங்க ராஜன் தப்பாட்டக்குழு, மேட்டுப்பாளையம் சேரன் துடும்பாட்டம் ஆகியவையும் நடந்தன. டி.எம்.சௌந்திரராஜன் கே.ஏ.குணசேகரன், மால்குடி சுபா, யுகேந்திரன், கே.எஸ். ஸ்ரீராம், புஷ்பா ஸ்ரீராம், இந்து, கருணாஸ், பவித்ரா, ஏழு வயதேயான சிறுமி சோபி ஆகியோர் மக்கள்திலகத்தின் ஹிட் படப்பாடலை பாடினார்கள்.

இசை விழாவில் மக்கள் திலகம் நடித்த படப்பாடல்களை பிரபல பாடகர்கள் இன்றைய கால ரசனைக்கு ஏற்ப சிறிது வித்தியாசமாகப் பாட, அதற்கேற்ப நமது தமிழ்நாட்டு கலாச்சார கிராமிய இசைக்கருவிகளையும், மேல்நாட்டு இசைக் கருவிகளையும் கலந்து வித்தியாசமாக இசைத்து இளைஞர்களையும் இசைப்பிரியர்களையும் மக்கள் திலகத்தின் ரசிகர்களையும் இன்ப வெள்ளத்தில் குதூகலிக்கச் செய்தது.

கலைவேந்தன் எம்.ஜி.ஆர். அவர்கள் திரைப்படங்களில் அணியும் ஆடைகள் பாணியில் கண்ணைக்கவரும் வகையில் வண்ண வண்ண ஆடைகளை பலர் அணிந்து நம் நாட்டு பாணியையும் மேலை நாட்டு பாணியையும் கலந்து மக்கள் திலகம் படப்பாடல்களுக்கு அற்புதமாக ஆடினார்கள்.

இளம் பெண்களும் கலர் கலராக பலவிதமான நவீன டிசைன்களில் உடையணிந்து அவர்களுடன் சேர்ந்து நடனமாடி கூடியிருந்த ரசிகர்களை உற்சாகப்படுத்தினர்.

மக்கள் திலகம் படப்பாடல்கள் பாடப்படும்போது லேட்டஸ்ட் மாடல்களில் உடையணிந்து அழகிப் போட்டியில் அணிவகுப்பது போன்று பெண்கள் மிடுக்காக நடந்து வந்தது வித்தியாசமாக இருந்தது.

'மானைத் தேடி மச்சான் வரப்போறான்', 'ஆடலுடன் பாடலைக் கேட்டு ரசிப்பதிலேதான் சுகம் சுகம்', 'ராஜாவின் பார்வை ராணியின் பக்கம்', 'துள்ளுவதோ இளமை தேடுவதோ தனிமை', 'நான் பார்த்திலே அவள் ஒருத்தியைத்தான் நல்ல அழகி என்பேன்', 'அழகிய தமிழ் மகள் இவள்', 'தொட்டால் பூ மலரும், தொடாமல் நான் மலர்ந்தேன்', 'பச்சைக்கிளி முத்துச்சரம் முல்லைக் கொடி யாரோ' போன்ற காலத்தால் என்றும் அழிக்க முடியாத மக்கள் திலகம் படப்பாடல்கள் வித்தியாசமான இசையுடன் இளமையூட்டப்பட்டு பிரபல பாடகர்கள் பாடினார்கள். மற்றும் டி.எம்.எஸ். அவர்கள் இந்நிகழ்ச்சியில் 'உலகம் பிறந்தது எனக்காக ஓடும் நதிகளும் எனக்காக', 'கொடுத்ததெல்லாம் கொடுத்தான் அவன் யாருக்காக கொடுத்தான்', என்ற பாடல்களை பழைய பாணியிலேயே இசை முழங்கப் பாடினார்.

விழாவில் சிறப்பு விருந்தினராக திரு.மூப்பனார், கவிஞர் வைரமுத்து, திரு.எஸ்.திருநாவுக்கரசு, நடிகர் சத்யராஜ் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்கள்.

நடிகர் சத்யராஜ் பேசும் போது, "மக்கள் திலகம், பொன்மனச்செம்மல், புரட்சிநடிகர், கலைவேந்தன், வசூல் சக்கரவர்த்தி எம்.ஜி.ஆர் ஆயிரத்தில் ஒருவன் மட்டுமல்ல, லட்சத்தில் ஒருவர். கோடியில் ஒருவர். ஒரே ஒருவர். எம்.ஜி.ஆர். மாதிரி வரலாம் என்று நினைத்து பார்க்கலாம். ஆனால், எம்.ஜி.ஆரைவிட மேலாக யாரும் வந்துவிட முடியாது. அது நடக்காத காரியம் என் பையன் ஜாக்கிசான் நடித்த படங்களை பார்க்கும் போது என்னிடம் எப்படி சிரிச்சிக்கிட்டே சண்டை போடுகிறார் பாருங்கள் என்பான். நான் சொன்னேன் அட போடா எங்க வாத்தியார் இதை எப்போதே செய்துவிட்டார் என்றேன். எங்களுக்கு மட்டும் அல்ல ஜாக்கிசானுக்கும் எங்க வாத்தியார் தான் குரு என்றேன்".

இதை சத்யராஜ் சொல்லும் போது ஸ்டேடியத்தில் எழுந்த கைதட்டல் அடங்க சில நிமிடம் ஆனது.

மொத்தத்தில் ஒரு 'ஹீரோஸ்டே' என்று மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். பிறந்த தினத்தை அசத்தோ அசத்தென்று அசத்திக் காட்டிவிட்டார்கள். இந்த நிகழ்ச்சியை ராஜ் டி.வி. நேரடியாக ஒளிபரப்பு செய்து சின்னதிரை ரசிகர்களை உற்சாகத்தில் ஆழ்த்தியது.

– எஸ்.வி. ஜெயபாபு

## புன்னகை அரசர் நடித்த படங்களின் பட்டியல்

| | படம் | வெளியான தேதி | இயக்குநர் |
|---|---|---|---|
| 1. | சதிலீலாவதி | 28.03.1936 | எல்லீஸ்ஆர். டங்கன் |
| 2. | இரு சகோதரர்கள் | 10.09.1936 | எல்லீஸ் ஆர். டங்கன் |
| 3. | தட்சயக்ஞம் | 31.03.38 | ராஜா சந்திரசேகர் |
| 4. | வீரஜெகதீஷ் | 28.08.38 | டி.பி. கைலாசம் ஆர்.பிரகாஷ் |
| 5. | மாயா மச்சீந்திரா | 22.04.39 | ராஜா சந்திரசேகர் |
| 6. | பிரஹலாதா | 12.12.39 | பி.என்.ராவ் |
| 7. | வேதவதி (அல்ல) சீதா | 22.02.41 | டி.ஆர். ரகுநாத் ஜனனம் |
| 8. | அசோக்குமார் | 10.07.41 | ராஜா சந்திரசேகர் |
| 9. | தமிழ் அறியும் பெருமாள் | 30.04.42 | டி.ஆர்.ரகுநாத் |
| 10. | ஜோதி மலர் (அல்லது) தாசிப்பெண் | 03.03.43 | எல்லீஸ் ஆர். டங்கன் |
| 11. | ஹரிச்சந்திரா | 14.01.44 | நாகபூஷணம் |
| 12. | சாலிவாகனன் | 16.02.45 | பி.என்.ராவ் |
| 13. | மீரா | 03.11.45 | எல்லீஸ் ஆர். டங்கன் |
| 14. | ஸ்ரீமுருகன் | 04.06.46 | ஏ.எஸ்.ஏ.சாமி |
| 15. | ராஜகுமாரி | 11.04.47 | ஏ.எஸ்.ஏ.சாமி |
| 16. | பைத்தியக்காரன் | 26.09.47 | கிருஷ்ணன்-பஞ்சு |
| 17. | அபிமன்யூ | 06.05.48 | எம்.சோம சுந்தரம் |
| 18. | ராஜமுக்தி | 09.10.48 | ராஜா சந்திரசேகர் |
| 19. | மோகினி | 31.10.48 | லங்கா சத்யம் |
| 20. | ரத்னகுமார் | 15.12.49 | கிருஷ்ணன்-பஞ்சு |
| 21. | மருத நாட்டு இளவரசி | 02.04.50 | ஏ. காசிலிங்கம் |
| 22. | மந்திரி குமாரி | 24.06.50 | எல்லீஸ் ஆர். டங்கன் |
| 23. | மர்மயோகி | 02.02.51 | கே. ராம்நாத் |
| 24. | சர்வாதிகாரி | 14.09.51 | டி.ஆர். சுந்தரம் |
| 25. | சர்வாதிகாரி (தெலுங்கு) | 05.10.51 | டி.ஆர்.சுந்தரம் |
| 26. | அந்த மான் கைதி | 14.03.52 | வி.கிருஷ்ணன் |
| 27. | குமாரி | 11.04.52 | ஆர். பத்மநாபன் |
| 28. | என் தங்கை | 31.05.52 | சி.எச். நாராயண மூர்த்தி |
| 29. | நாம் | 05.03.53 | ஏ. காசிலிங்கம் |
| 30. | பணக்காரி | 12.02.53 | கோபால கிருஷ்ணன் |
| 31. | ஜெனோவா | 15.06.53 | எஃப்.. நாகூர் |
| 32. | மலைக்கள்ளன் | 22.07.54 | ஸ்ரீராமுலு நாயுடு |
| 33. | கூண்டுக்கிளி | 26.08.54 | டி.ஆர். ராமண்ணா |
| 34. | குலேபாகவலி | 29.07.55 | டி.ஆர். ராமண்ணா |
| 35. | அலிபாபாவும் 40 திருடர்களும் | 14.01.56 | டி.ஆர். சுந்தரம் |
| 36. | மதுரை வீரன் | 13.04.56 | டி.யோகானந்த் |
| 37. | தாய்க்குப்பின் தாரம் | 21.09.56 | எம்.ஏ. திருமுகம் |
| 38. | சக்ரவர்த்தி திருமகள் | 18.01.57 | ப. நீலகண்டன் |
| 39. | ராஜராஜன் | 26.04.57 | டி.வி. சுந்தரம் |
| 40. | புதுமைபித்தன் | 02.08.57 | டி.ஆர் ராமண்ணா |
| 41. | மகாதேவி | 22.11.57 | சுந்தர்ராவ் நட்கர்னி |
| 42. | நாடோடி மன்னன் | 22.08.58 | எம்.ஜி.ஆர் |
| 43. | தாய் மகளுக்குக் கட்டிய தாலி | 31.12.59 | ஆர்.ஆர். சந்திரன் |
| 44. | பாக்தாத் திருடன் | 06.05.60 | டி.பி. சுந்தரம் |
| 45. | ராஜா தேசிங்கு | 02.09.60 | டி.ஆர். ரகுநாத் |
| 46. | மன்னாதி மன்னன் | 19.10.60 | எம். நடேசன் |
| 47. | அரசிளங்குமரி | 01.01.61 | ஏ.எஸ்.ஏ.சாமி |
| 48. | திருடாதே | 23.03.61 | ப. நீலகண்டன் |
| 49. | சபாஷ் மாப்பிளே | 14.07.61 | எஸ். ராகவன் |
| 50. | நல்லவன் வாழ்வான் | 31.08.61 | ப.நீலகண்டன் |
| 51. | தாய் சொல்லைத் தட்டாதே | 07.11.61 | எம்.ஏ. திருமுகம் |
| 52. | ராணி சம்யுக்தா | 14.01.62 | டி. யோகானந்த் |
| 53. | மாடப்புறா | 16.02.62 | எஸ்.ஏ. சுப்பராமன் |
| 54. | தாயைக் காத்த தனயன் | 13.04.62 | எம்.ஏ. திருமுகம் |
| 55. | குடும்பத்தலைவன் | 15.08.62 | எம்.ஏ.திருமுகம் |
| 56. | பாசம் | 31.08.62 | டி.ஆர். ராமண்ணா |
| 57. | விக்ரமாதித்தன் | 27.10.62 | டி.ஆர்.ரகுநாத், என்.எஸ். ராமதாஸ் |
| 58. | பணத்தோட்டம் | 11.01.63 | கே. சங்கர் |
| 59. | கொடுத்து வைத்தவள் | 09.02.63 | ப. நீலகண்டன் |
| 60. | தர்மம் தலைகாக்கும் | 22.02.63 | எம்.ஏ.திருமுகம் |
| 61. | கலை அரசி | 19.04.63 | ஏ. காசிலிங்கம் |
| 62. | பெரிய இடத்துப் பெண் | 10.05.63 | டி.ஆர்.ராமண்ணா |
| 63. | ஆனந்த ஜோதி | 28.06.63 | வி.என்.ரெட்டி, ஏ.எஸ்.ஏ.சாமி |
| 64. | நீதிக்குப்பின் பாசம் | 15.08.63 | எம்.ஏ.திருமுகம் |
| 65. | காஞ்சித்தலைவன் | 26.10.63 | ஏ. காசிலிங்கம் |
| 66. | பரிசு | 15.11.63 | டி. யோகானந்த் |
| 67. | வேட்டைக்காரன் | 14.01.64 | எம்.ஏ.திருமுகம் |
| 68. | என் கடமை | 13.03.64 | எம்.நடேசன் |

## "புன்னகை வள்ளல் எம்.ஜி.ஆர். நினைவுகள் 2000"

| | | | |
|---|---|---|---|
| 69. | பணக்கார குடும்பம் | 24.04.64 | டி.ஆர்.ராமண்ணா |
| 70. | தெய்வத்தாய் | 18.07.64 | பி.மாதவன் |
| 71. | தொழிலாளி | 25.09.64 | எம்.ஏ.திருமுகம் |
| 72. | படகோட்டி | 03.11.64 | டி.பிரகாஷ்ராவ் |
| 73. | தாயின் மடியில் | 18.12.64 | ஏ.சுப்பாராவ் |
| 74. | எங்க வீட்டுப் பிள்ளை | 14.01.65 | சாணக்யா |
| 75. | பணம் படைத்தவன் | 27.03.65 | டி.ஆர். ராமண்ணா |
| 76. | ஆயிரத்தில் ஒருவன் | 09.07.65 | பி.ஆர்.பந்துலு |
| 77. | கலங்கரை விளக்கம் | 28.08.65 | கே. சங்கர் |
| 78. | கன்னித்தாய் | 10.09.65 | ஏம்.ஏ. திருமுகம் |
| 79. | தாழம்பூ | 23.10.65 | என்.எஸ்.ராமதாஸ் |
| 80. | ஆசை முகம் | 10.12.65 | பி.புல்லையா |
| 81. | அன்பே வா | 14.01.66 | ஏ.சி.திருலோக்சந்தர் |
| 82. | நான் ஆணையிட்டால் | 04.02.66 | சாணக்யா |
| 83. | முகராசி | 18.02.66 | எம்.ஏ. திருமுகம் |
| 84. | நாடோடி | 14.04.66 | பி.ஆர்.பந்துலு |
| 85. | சந்திரோதயம் | 27.05.66 | கே. சங்கர் |
| 86. | தாலி பாக்கியம் | 27.98.66 | கே.பி. நாகபூஷணம் |
| 87. | தனிப்பிறவி | 16.09.66 | எம்.ஏ. திருமுகம் |
| 88. | பறக்கும் பாவை | 11.11.66 | டி.ஆர் ராமண்ணா |
| 89. | பெற்றால்தான் பிள்ளையா | 09.12.66 | கிருஷ்ணன்-பஞ்சு |
| 90. | தாய்க்குத் தலைமகன் | 13.01.67 | எம்.ஏ.திருமுகம் |
| 91. | அரச கட்டளை | 19.05.67 | எம்.ஜி.சக்ரபாணி |
| 92. | காவல்காரன் | 07.09.67 | ப.நீலகண்டன் |
| 93. | விவசாயி | 01.11.67 | எம்.ஏ.திருமுகம் |
| 94. | ரகசிய போலீஸ் 115 | 11.01.68 | பி.ஆர்.பந்துலு |
| 95. | தேர்த் திருவிழா | 23.02.68 | எம்.ஏ.திருமுகம் |
| 96. | குடியிருந்த கோவில் | 05.03.68 | கே.சங்கர் |
| 97. | கண்ணன் என் காதலன் | 25.04.68 | ப. நீலகண்டன் |
| 98. | புதியபூமி | 27.06.68 | சாணக்யா |
| 99. | கணவன் | 15.08.68 | ப. நீலகண்டன் |
| 100. | ஒளிவிளக்கு | 20.09.68 | சாணக்யா |
| 101. | காதல் வாகனம் | 21.10.68 | எம்.ஏ.திருமுகம் |
| 102. | அடிமைப் பெண் | 01.05.69 | கே. சங்கர் |
| 103. | நம் நாடு | 07.11.69 | ஜம்பு |
| 104. | மாட்டுக்கார வேலன் | 14.01.70 | ப. நீலகண்டன் |
| 105. | என் அண்ணன் | 21.05.70 | ப. நீலகண்டன் |
| 106. | தலைவன் | 24.07.70 | தாமஸ், சிங்கமுத்து |
| 107. | தேடி வந்த மாப்பிள்ளை | 29.08.70 | பி.ஆர்.பந்துலு |
| 108. | எங்கள் தங்கம் | 09.10.70 | கிருஷ்ணன்-பஞ்சு |
| 109. | குமரிக் கோட்டம் | 26.01.71 | ப. நீலகண்டன் |
| 110. | ரிக்ஷாக்காரன் | 29.05.71 | எம்.கிருஷ்ணன் |
| 111. | நீரும் நெருப்பும் | 18.10.71 | ப. நீலகண்டன் |
| 112. | ஒரு தாய் மக்கள் | 09.12.71 | ப. நீலகண்டன் |
| 113. | சங்கே முழங்கு | 04.02.72 | ப. நீலகண்டன் |
| 114. | நல்ல நேரம் | 10.03.72 | எம்.ஏ.திருமுகம் |
| 115. | ராமன் தேடிய சீதை | 13.04.72 | ப. நீலகண்டன் |
| 116. | நான் ஏன் பிறந்தேன் | 09.06.72 | எம்.கிருஷ்ணன் |
| 117. | அன்னமிட்ட கை | 15.09.72 | எம்.கிருஷ்ணன் |
| 118. | இதய வீணை | 20.10.72 | கிருஷ்ணன்-பஞ்சு |
| 119. | உலகம் சுற்றும் வாலிபன் | 11.05.73 | எம்.ஜி.ஆர். |
| 120. | பட்டிக்காட்டுப் பொன்னையா | 10.08.73 | பி.எஸ்.ரங்கா |
| 121. | நேற்று இன்று நாளை | 12.07.74 | ப. நீலகண்டன் |
| 122. | உரிமைக்குரல் | 07.01.74 | சி.வி.ஸ்ரீதர் |
| 123. | சிரித்து வாழ வேண்டும் | 30.11.74 | எஸ்.எஸ். பாலன் |
| 124. | நினைத்ததை முடிப்பவன் | 09.05.75 | ப. நீலகண்டன் |
| 125. | நாளை நமதே | 04.07.75 | கே.எஸ்.சேதுமாதவன் |
| 126. | இதயக்கனி | 22.08.75 | ஏ.ஜெகநாதன் |
| 127. | பல்லாண்டு வாழ்க | 31.10.75 | கே. சங்கர் |
| 128. | நீதிக்குத் தலை வணங்கு | 18.03.76 | ப.நீலகண்டன் |
| 129. | உழைக்கும் கரங்கள் | 23.05.76 | கே. சங்கர் |
| 130. | ஊருக்கு உழைப்பவன் | 12.11.76 | எம்.கிருஷ்ணன் |
| 131. | நவரத்தினம் | 05.03.77 | ஏ.பி. நாகராஜன் |
| 132. | இன்று போல் என்றும் வாழ்க | 05.05.77 | கே. சங்கர் |
| 133. | மீனவ நண்பன் | 14.07.77 | சி.வி.ஸ்ரீதர் |
| 134. | மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன் | 14.01.78 | எம்.ஜி.ஆர் |

**வாழ்த்துக்கள்**
**கே. கலில்பாய்,**
**ஜி.வாசு, வி.கண்ணையா**
**சென்னை**

# மலரும் நினைவுகள்....
# புன்னகை வேந்தன் எம்.ஜி.ஆர்

## சதி லீலாவதி

நான் நடித்த எனது முதல் படமான 'சதிலீலாவதி'யில் எனக்களிக்கப்பட்டது 'இன்ஸ்பெக்டர்' வேடம்.

முதலில் 'துப்பறிபவன்' என்று சொன்னார்கள்... அதன் பிறகு கதாநாயகனின் நண்பன் பரசுராமனாகக் குறிப்பிடப்பட்டு வேறு வழியின்றி என்மீது பச்சாதாபப்பட்டுக் கொடுத்த வேடம்தான் 'இன்ஸ்பெக்டர்' பாத்திரம். அதிலும் சைக்கிள் ஓட்டத் தெரியாத இன்ஸ்பெக்டராகப் பதவியேற்றுக் கொண்ட நான், பதவியின் தகுதியைக் காப்பாற்ற கலைவாணரின் வாயிலாக சைக்கிள் ஓட்டக் கற்றுக்கொண்டேன்.

சிலர் பதவியை உயர்த்துகிறார்கள். சிலரைப் பதவி உயர்த்துகிறது. ஆனால் நானோ அந்த அப்பாவி இன்ஸ்பெக்டரையும் உயர்த்த வில்லை; அந்த இன்ஸ்பெக்டர் பதவி (வேடமும்) என்னையும் உயர்த்தவில்லை.

## தட்சயக்ஞம்

நல்ல உள்ளம் படைத்த திரு. எம்.கே. ராதா அண்ணன் அவர்கள் சிபாரிசு செய்தும், 'சமூகத் தொண்டு' என்ற படத்தில் நடிக்க மறுத்தேனோ அதே அண்ணன் திரு.எம்.கே.ஆர். அவர்களிடம் நானே வலியச் சென்று வேலை கேட்டு நடிப்பதற்கும், சிறந்த ஆசான் இராசா சந்திரசேகர் அவர்களை மூத்த அண்ணனாகவும் அன்பு ஆசானாகவும் அடையவும் காரணமாயிருந்த படம் தான் தட்சயக்ஞம்.

'தட்சயக்ஞத்தில்' எனக்கு வேலை வாங்கித் தந்த திரு. எம்.கே.ஆர். அண்ணன் அவர்கள் முதலில் தட்சனாக நடிக்க ஒப்பந்தம் பேசி முடிவில் சம்பளத் தொகை வேறுபாட்டினால் நடிக்காமல் போய்விட்ட படம் தான் அது எனக்கு வேலை வாங்கிக் கொடுத்துவிட்டுத் தனக்கு வேலையில்லாமற்போயும் மகிழ்ச்சியோடு வாழ்க்கையைக் கழித்த திரு.எம்.கே.ஆர். அவர்களின் பண்பை நடைமுறையில் வெளிக்காட்டிய படமும் அதுவே.

## ஸ்ரீ முருகன்

''ஸ்ரீ முருகனி''ல் சிவன் வேடத்திற்கு ஒப்பந்தம் செய்யப்பட்ட நான், அதில் நடனம் ஆடுவதற்காகக் குறைந்தது மூன்று நான்கு மாதங்கள் நடனப் பயிற்சியைப் பெற்ற எனக்கு நடன ஆசிரியராகப் பணியாற்றியும் 'ஆசான்' என்று எல்லோராலும் அழைக்கப்பட்டவருமான திரு.கே.ஆர்.குமார் அவர்களை எனக்கு உடன் பிறவா அண்ணனாகப் பெறக் காரணமாயிருந்த படம்தான் ''தட்சயக்ஞம்'' இங்கும் எனக்கு வேலை வாங்கிக் கொடுத்த இயக்குனர் திரு.இராஜா சந்திரசேகர் அவர்களே, அந்தப் படத்தை இயக்கும் பொறுப்பிலிருந்து அவர் விலகிக் கொள்ளும்படி நேரிட்டது. ஆனால் நான் அந்த வேடத்தில் நடித்தே ஆக வேண்டும் என்று என்னை வற்புறுத்தி நடிக்கச் செய்து மகிழ்ந்தவர் அவர்!

இந்தப் படம் முடிவதற்குள் எத்தனையோ விபரீதங்கள் ஏற்பட்டன. கலைவாணரும் ஸ்ரீ முருகனாக நடிக்க இருந்த ''ஏழிசை மன்னன்'' திரு.எம்.கே. தியாகராஜா பாகவதர் அவர்களும் குற்றவாளியென்று கைது செய்யப்பட்ட நேரம் அது. பாகவதருக்குப் பதில் திரு. ஹொன்னப்ப பாகவதர் நடிக்கும் நிலை உருவாக்கப்பட்டதும் அந்தப் படத்தில்தான். என்னைவிட வயதில் மூத்த திரு.ஹொன்னப்ப பாகவதருக்குத் தந்தையாக நான் நடிக்கும் வாய்ப்பு அது. எனக்கு அவர்களோடு நடிக்கும்போது ஏற்பட்ட மகிழ்ச்சி சொல்லத் தரமன்று.

## மோகினி

''மோகினி'' படத்தில் நடிக்கும் போது எனது சொந்த வாழ்க்கையில் மிகப் பெரிய மாறுதல் ஏற்பட்டது. முதன் முதலாக விவரம் தெரிந்த நிலையில், ஓரளவிற்கு உலகம் தெரிந்த நிலையில், நான் ஒரு பெண்ணை மணந்து கொள்ளும் ஆசை ஏற்படக் காரணமாயிருந்த படம் ''மோகினி'' ஆமாம், அப்போது அந்தப் படத்தில் என்னோடு நடித்த ஜானகிதான் அந்தப் பெண்.

அதற்குப் பிறகுதான் நாங்கள் மணந்து கொள்ள முடிவு செய்யும் சூழ்நிலை உருவாகியது.

இப்போதைய எனது வாழ்க்கைத் துணைவியான திருமதி.ஜானகி ராமச்சந்திரனை எனக்குத் தந்தது அந்த 'மோகினி' தான்.

## அந்தமான் கைதி

'அந்தமான் கைதி' படத்தில் நடிக்க எனக்கு வாய்ப்புத் தந்தவர் என் வளர்ப்புத் தந்தை போல் என்மீது அன்பு செலுத்திய, மறைந்த டைரக்டர் திரு.கே. சுப்பிரமணியம் அவர்களாவார். இதில் எனக்காகச் சிதம்பரம் திரு.ஜெயராமன் அவர்கள் பாடியிருக்கிறார்கள். 'காணி நிலம் வேண்டும்' என்ற பாரதியாரின் பாடல் கேட்கக் கேட்கத் திகட்டாத ஒன்றாக இன்றும் என் காது களில் ரீங்காரம் செய்து கொண்டே இருக்கின்றது.

அந்தப் படத்தில் நான் நடித்த வேடத்தில் தங்கையின் பெயரைச் சொல்லி அழைக்க வேண்டிய காட்சியில் வேறு ஒரு பெயரைத் திரும்பத் திரும்பச் சொல்லிப் பல ஷாட்டுகளில் தவறுகள் நேர்ந்தன. எல்லா நண்பர்களும் கேலி செய்தனர்.

நானும் ஏன் அப்படித் தவறு நேரிடுகிறது என்பதை என்னால் யூகிக்க முடியாமல் தவித்தேன். பலர் எனது பண்புள்ள நடத்தையைப் பற்றிக்கூடச் சந்தேகப்பட்டது போன்றிருந்தது, அவர்களுடைய பார்வை; பேச்சு; ஒருவருக்கொருவர் சைகை செய்து சிரித்துக் கொண்டது எல்லாம்.

சிறிது நேரம் என்னை நானே அமைதிப் படுத்திக் கொண்டு சிந்தித்தேன். அப்பாடா ! காரணம் தெரிந்து விட்டது...

'அந்தமான் கைதி'யில் எனது தங்கையின் பாத்திரத்துக்குள்ள பெயரை மறந்து, 'மீனா' என்று வேறு பெயரைச் சொன்னதற்குக் காரணம் 'மீனா' என்ற பெயரைத் தாங்கியவர் எனது காதலியாக நடித்த வேறு ஒரு பாத்திரத்தின் பெயர்கூட அல்ல; இன்னொரு படத்தில் எனக்குத் தங்கையாக நடித்த பாத்திரத்தின் பெயராகும் 'மீனா' என்பது.

இந்த 'மீனா' என்ற பெயர் மட்டும் ஏன் எனது நினைவில் நின்று 'அந்தமான் கைதி'யில் தங்கையின் பெயர் மறந்துவிட வேண்டும்? இந்த இரு தங்கைகளில் ஒருவர் மீது மட்டும் பற்றும் அக்கறையும் அதிகமாக எனக்கு இருந்ததா? அப்படி ஏதுமில்லை !

சுமார் பத்துப் பதினைந்து நாட்களாக இரவு பகல் என்றில்லாமல் 'என் தங்கை' படப்பி டிப்பு தொடர்ந்து நடந்து கொண்டிருந்ததாலும் தன் தங்கையை மரணக்கோலத்தில் கண்டு கதறி அழுது தோளில் தூக்கிப் போட்டுக் கொண்டு கடலில் போய்த்தங்கையின் சவத்தோடு மூழ்கிவிடு வதும் போன்ற உச்சக்கட்டக் காட்சிகளில் நடித்துக் கொண்டிருந்ததன் விளைவுமே அது என்பதை உணர்ந்தேன்.

இதை அறிந்த திரு.கே. சுப்பிரமணியம் அவர்கள் பிற்பகலில் படப்பிடிப்பை நிறுத்திவிட்டு என்னை வீட்டிற்குப் போய் ஓய்வு எடுத்துக் கொள்ளச் சொல்லி அனுப்பி வைத்தார்கள்.

## என் தங்கை

'என் தங்கை'யில் நான் நடித்ததை இப்போது எண்ணினாலும் மனத்தில் அப்போது நிலைத்த நிகழ்ச்சிகள் பல தோன்றி என் உள்ளத்தைக் குளிர்விக்கின்றன.

அந்தப் படத்தைத் தயாரித்த உரிமையாளர்களில் எங்களிடம் அதிகம் நெருங்கிப் பழகியவர்கள் இருவர். இவர்களிருவரும் புதிய தயாரிப்பாளர்கள் போலவே இல்லை. ஒவ்வொரு உரையாடலிலும் காட்சியிலும் அவ்வப்போது தொடர்பு கொண்டு ஆங்காங்கே திருத்தங்கள் செய்த வண்ணமிருந் தனர்.

அவர்களில் திரு. சவுண்டப்பச் செட்டியார் அவர்கள் தீவிரமாகச் செயல்படுவார். ஆனால் இவர் பேசுகிற சத்தமே வெளியில் கேட்காது. ஆனால் சொல்லுகின்ற கருத்துக்கள் அறிவு செறிந்ததாகவும், ஆழமானதாகவும், பண்புள்ளதாகவுமே இருக்கும். 'முதன் முதலாக இந்த உரிமையாளர்கள் தான் தமிழில் ஒப்பந்தப்பத் திரம் எழுதியவர்கள்' தமிழ்ப் பற்றும், தமிழர்கள் என்பதில் தனித்தன்மையோடு பெருமிதமும் கொண்டவர்கள். தமிழை-தமிழரை, யார் குறை வாகப் பேசினாலும் கிஞ்சித்தும் பொறுத்துக் கொள்ளாதவர்கள். படம் வெளியிடப்பட்டபின் எனக்கும், எனது தமையனாருக்கும் அசோகா பிக்சர் ஸாரிடமிருந்து கடிதம் வந்தது.

''நீங்கள் தந்த ஒத்துழைப்பும் உங்களின் திறமையும்தான் ''என் தங்கை'' படம் வெற்றிகர மாக ஓடிக் கொண்டிருப்பதற்குக் காரணம். உங்களுக்கு எங்கள் நன்றி!'' என்ற கருத்தில் கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. அதற்கு முன்னும் அப்படிப் பட்ட கடிதங்கள் எனக்கு வந்ததில்லை. அதற்குப் பிறகும் வந்ததாக நினைவில்லை.

## ஜெனோவா

''ஜெனோவா'' கிருஸ்துவ மத சம்பந்தப் பட்ட கதை. இதில் கர்த்தரை வணங்குவது போன்ற காட்சி ஒன்று வருகிறது. நான் அப்படிப் பட்ட காட்சியில் நடிப்பேனோ மாட்டேனோ என்ற சந்தேகம் இயக்குநருக்கும் தயாரிப்பாளருக்கும். காட்சி சோடனைகளைத் தயார் செய்துவிட்டார்கள்.

உலக பெரியார்களை அதாவது சமூகத் துக்காக சேவை செய்து தியாகத்தழும்பேற்று மக்களுடைய நல்வாழ்வுக்காகத் தம் உயிரையே ஈந்தவர்களின் கொள்கையில் ஒரு சில பிடித் திருந்தாற் கூட அவர்களைப் போற்றலாம். அவர் களைப் பின்பற்றலாம். இதுதான் எனது எண்ணம். எனவே நான் அந்தக் காட்சியில் நடித்தேன்.

எனது நண்பர்கள் யாரும் எந்தக் குறையும் கூறவில்லை. ஆகவே கொள்கைத் தெளிவு பெற்ற வர்கள் யாரும் எந்த மதத் தலைவரையும் மதிப்ப தாலோ, அவர்களிடம் மரியாதை காண்பிப்ப தாலோ, தனது கொள்கையை விட்டுவிட்டதாகப் பொருளாகாது என்ற உறுதியை எனக்களித்த படமாகும் இது.

## மர்மயோகி

''மர்மயோகி'' இது சம்பந்தமாக எழுத வேண்டுமாயின் அதுவே ஒரு தனிக் கதைபோன்று பெரியதாக நீண்டுவிடக் கூடியதாகும். என்னைக் கலை வாழ்க்கையின் புதியதொரு பாதைக்குத் திருப்பிவிட்ட படமாகும் இது. எத்தனையோ நல்ல வர்களின் துணையில் வெற்றிகரமாக என்னை நடைபோடவைத்த படமாகும் இது. கலைமேதை யான மறைந்த திரு.கே.ராமனாத் என்ற நல்லறிவா ளரின் அன்புத் தொடர்பு கிட்டவும், அவர் இயக்கி நான் நடிக்கவும் எனக்குக் கிடைத்த வாய்ப்பாகும் இந்த ''மர்மயோகி'' படம்.

நான் ஏற்ற பாத்திரத்துக்காக எனக்கு எழு தப்பட்டிருந்த உரையாடல்கள் ஆட்சி செய்வோரின் கொடுகோல் தன்மையை ஏசுவதா கவும் மக்களின் சார்பாக சர்வாதிக்காரம் செய்யும் அரசைத் தாக்குவதாகவும் அமைக்கப்பட்டிருந் தன. இந்தப் படத்தில் நடித்து படம் வெளிவந் தபின் மக்கள் எனது கொள்கையின் பிரதிபலிப் புதான் இந்த உரையாடல்கள் என்பதை அறிந்தனர். ஏனெனில் என் உள்ளத்தில் இருந்த எழுச்சி நிறைந்த வேகத்தை இந்த உரையாடல்களும் இருந்ததால் உணர்ந்து, அதை வெளிப்படுத் தினேன் -அழுத்தந் திருத்தமாக. எனவேதான் மக்களின் உள்ளத்திலும் அது எதிரொலித்தது. அந்தப் படம் வெளி வந்த பிறகு ஒரு நாள் திருச் சியில் நடந்த கழக நாடகத்தை இன்றைய முதல்வர், கலைஞர் டாக்டர் கருணாநிதி அவர்கள் தலைமையிலும் எனது முன்னிலையிலும் நடித் தார்கள். அந்த நாடகத்தின் போதுதான் இந்நாள் முதல்வரால் கழகச் சார்பில் எனக்கு ''புரட்சி நடிகர்'' என்ற பட்டம் தரப்பட்டது. அப்படிப்பட்ட சிறந்த பெருமை தரக் காரணமாயிருந்தது இந்த மர்ம யோகி.

## மந்திரி குமாரி

''மந்திரி குமாரி'' படம் தயாரிக்கப்பட்ட போது பல எதிர்ப்புக்கள் இருந்தன. கம்பெனியில் இருப்பவர்களில் குறிப்பிடத்தக்க சிலரே, ''இந்தப் படம் ஓடாது; தமிழ்ப் பண்பாட்டுக்கு ஒவ்வாத கருத்துக்களும் தமிழக மக்கள் வெறுக்கக்கூடியது மாக இருக்கின்றது'' என்றும், ''எதையும் பொறுத்துக் கொள்வார்கள்; கணவனையே மனைவி கொன்று விடுவது சகிக்க முடியாத ஒன்றாகும்'' என்றும் குறைகூறி அச்சுறுத் தினார்கள். ஆனால் எதிர் நீச்சலே தனது வாழ்க்கை யென்று ஒர் இலக்கணத்தைத் தனது முன்னேற்றக் கொள்கையால் அமைத்துக் கொண்டுவிட்ட கலைஞர் அவர்களின் கதையும், உரையாடலும் மறைந்த திரு.டி.ஆர்.எஸ். அவர்களை ஈர்த்துக் கொண்டுவிட்ட காரணத்தால் படம் தயாரிப்பதை அந்த சகுனிகளால் தடைப்படுத்த இயலாமற் போய்விட்டது. படம் வெளியிடப்பட்ட பிறகுதான்

தெரிந்தது கலைஞரின் நியாயமான கருத்துக்கள்தான் தமிழக மக்களில் நொந்து போனவர்களான ஏழைகள், பாட்டாளித் தொழிலாளர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் முதலியவர்களின் கருத்துக்களும் என்பது வெளிப்படுத்தப்பட்டது. தமிழகங்மெங்கும் வெற்றிகரமாகப் பல வாரங்கள் ஆங்காங்கே சிறப்பாக ஓடியது. குற்றம் சொன்னவர்களின் கூற்றுக்கள் அனைத்தும் இந்த வெற்றிக் கொடி பறந்தடித்த காற்றில் எங்கோ சிதறுண்டு போயின.

## நாம்

''நாம்'' படத்தைத் தயாரித்த மேகலா பிக்சர்ஸ் தோன்றியது வினோதாமான ஒன்றாகும் !

முதலில் எனது தமையானார், நான், இயக்குநர் திரு.ஏ. காசிலிங்கம் இம்மூவரும்தான் உரிமையாளர்கள். பிறகு நடிகர் திரு.பி.எஸ். வீரப்பா அவர்களும் பங்குதாரர். ஆனால் அதன் பிறகு எங்கள் வற்புறுத்தலுக்குப் பின் இன்றைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞரைப் பங்குதாரர் ஆனார்.

படம் வெளியிட்ட பின் கல்லக்குடி போராட்டத்தின் போது கலைஞர் சிறையிலிருந்த போது தமையனார் முதலில் விலகினார். பிறகு நான் விலகினேன். அதன் பிறகு வீரப்பா அதற்குகடுத்து, திரு. காசிலிங்கம். இப்படி எல்லோரும் பிரிந்தோம். ஆனால் அன்றும் இன்றும் இப்போதும் நாங்கள் அனைவரும் ''நாங்கள்'' என்றில்லை; ''நாம்'' என்றிருக்கிறோம்.

மேகலாவில் உரிமையாளர்காளயிருந்த நாங்கள் அனைவருமே தனித்தனித் தயாரிப்பாளர்களாக உருவாகிவிட்டோம். தனித்தனித் தயாரிப்பாளர்களாக இயங்கும் தன்மை பெற்றுள்ள நாங்கள் ஒன்று சேர்ந்து எடுத்த ''நாம்'' படம் அன்று மிகப் பெரிய வெற்றி பெறவில்லை; ஆனால் நாங்கள் ஒவ்வொருவரும் தனியாகத் தயாரித்த படங்கள் நல்ல நல்ல வெற்றிகளைப் பெற்றன !

## நாடோடி மன்னன்

''1937 - 38 ஆம் ஆண்டுகளில் நான் கல்கத்தாவில் மாயா மச்சீந்திரா படத்தில் நடித்துக் கொண்டிருந்த காலம். ஒரு நாள் சில நண்பர்களுடன் ஆங்கிலப்படம் ஒன்றைப் பார்க்கப் போனேன். 'இப் ஐ வெர்கிங்' என்ற படம் அது. ''ரோனால்ட் கால்மண்'' என்ற பிரபல நடிகர் நடித்த படம் அது. அதில் ஒரு காட்சியில் ''நான் மன்னனானால்'' என்று பேசுகிறார்.

என்னென்ன பேசினார் என்று எனக்குத் தெரியாது. ஆனால் அந்தக் கருத்து என் மனத்தில் அப்போதே பதிந்தது. அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பேன். நான் மன்னானால் ..... என்று.

''நாடோடி மன்னனி'ன் கருப்பொருள் அப்போதே தோன்றிவிட்டது. அந்தக் காலத்தில் ஏழ்மையை பற்றியும் மக்களின் நிலையைப் பற்றியும் சிந்தித்தவன் நான். சிந்தித்தவன் என்பதைவிட அனுபவித்துக் கொண்டிருந்தவன் என்பதே பொருந்தும்.

## அடிமைப்பெண்

உள்ளத்தால் ஒருவன் அல்லது ஒருத்தி அடிமையாகிவிட்டால் புறத்தோற்றத்தால் அவனோ அவளோ அடிமையாகாவிட்டாலும் அடிமைதான். அது போல் புறத்தோற்றத்தால் அடிமையாகிக் காட்சி தந்தாலும் உள்ளதால் அடிமையாகாதவரை அடிமையென்று ஏற்க முடியாது.

இது எனக்கு உடன்பாடான கருத்து. இதை ஒரு படத்தில் வெளியிட வேண்டுமென்ற ஆசை இருந்தது. வெளிநாட்டுப் படங்களைப் போல் காட்சியமைப்பிலும் இயற்கைக் காட்சிகள் நிறைந்த வெளிப்புறச் சூழ்நிலையிலும் ஒரு படம் எடுக்க வேண்டுமென்ற எண்ணம் எனக்கு எழுந்தது. நான் முதலில் தயாரித்த 'நாடோடி மன்னன்' படமாக்கப்பட்ட போது இருந்த வசதிகளைவிட, தொழில் நுணுக்கக் கருவிகள் முதலாக மற்றும் பல துறைகளிலும் வசதிகள்

வந்திருக்கின்றன. எனவே 'அடிமைப்பெண்' கதையை அமைக்கும் போதே இப்படியெல்லாம் காட்சிகள் உருவாக வேண்டுமென்ற குறிக்கோளை வைத்தே கதை பின்னப்பட்டது.

இது நிகழுமா, நிகழாதா என்பதைவிட என் இந்த அடிப்படையில் திருத்த முடியாது என்பது தான் என் மனதில் எழுந்த கேள்வி. பெண்ணாசை, பொன்னாசை, மண்ணாசை, பேராசை ஆகிய தீய குணங்களுக்கு நடுவே தாய் அன்பு, தொண்டுள்ளம், தியாக உணர்வு இவற்றிக்கு ஏற்படும் வெற்றியை விளக்குவதுதான் அடிமைப்பெண்ணின் கதை.

என் சக்திக்கு என்னுடைய சூழ்நிலைக்கு ஏற்ப ஒரு நல்ல காரியத்தை என் கலைத் தொழிலில் செய்திருக்கிறேன் என்ற மனத்திருப்பதி எனக்கு நிச்சயமாக 'அடிமைபெண்' படத்தில் உண்டு.

## நம்நாடு

நான் நடித்து வந்திருக்கும் 'நம் நாடு' படத்தில் நான் ஏற்று நடிக்கும் 'துரைவேடம்' கட்சி, வகுப்பு, மதம், இனம் ஆகிய அனைத்துக்கும் அப்பாற்பட்ட பாத்திரம். துரை என்ற அந்த இளைஞன் குறிப்பிட்ட ஒரு சிலரை மட்டும் கண்டிக்கவில்லை. சமுதாயத்தில் தவறு செய்யும் அனைவரையும் அவன் கண்டிக்கிறான். தவறு செய்பவர்கள் எந்த கட்சியில் எந்த ஸ்தானத்தில் இருந்தாலும் சரி அவர்களை துரையுடைய கண்டனம் தாக்குகிறது. இன்னும் சொல்லப் போனால் நான் (எம்.ஜி.ராமச்சந்திரன்) தவறு செய்தாலும் என்னையும் அந்த பாத்திரம் தாக்கத்தான் செய்யும்.

தவறு செய்பவர்கள் இதைப் பார்த்து வேதனைப்படலாம். ஆனால் மனித இனத்துக்கு குறிப்பாக ஜனநாயகம் இருக்கின்ற நாட்டுக்கு, இத்தகைய இளைஞர்கள் கண்டிப்பாக வேண்டும். அதனால் இந்த படத்தின் 'துரை' பாத்திரம் என்னை மிகவும் கவர்ந்துவிட்டது.

தேவை, சூழ்நிலை இந்த இரண்டும்தான் ஒரு மனிதனை நல்லவனாகவோ, கெட்டவனாகவோ ஆக்குகிறது, லஞ்சம் வாங்குவது தவறு என்ற சிந்தனையை வளர்த்து லஞ்சம் வாங்க வேண்டிய அவசியமில்லாத ஒரு சூழ்நிலையை உருவாக்கினால் இந்த தீய பழக்கம் (இதை ஒரு பழக்கம் என்று தான் கொள்ள வேண்டும்) மறைந்துவிடும். லஞ்சம் வாங்குவது தேசிய உணர்வுக்கு எதிரானது என்ற உள்ளுணர்வு உருவாக்கப்பட வேண்டும். சட்டத்தால் மட்டுமே லஞ்சத்தை ஒழித்துவிட முடியாது.

காந்தி அடிகளே சொன்னது போல் மக்கள் மனம் மாறி ஒத்துக் கொள்ளும்வரை, எதையும் சட்டம் என்று சொல்ல முடியாது. தடை என்று தான் சொல்ல வேண்டும் ஒவ்வொருவருக்கும் எதிர்கால வாழ்க்கையை பற்றி ஓர் உத்திரவாதம் இருந்தால் இந்த 'லஞ்சப் பேய்' படிப்படியே அழிந்துவிடும்.

காந்தியடிகளின் உயரிய கொள்கைகளில் ஆழந்திருக்கின்ற எனக்கு 'தென்னாட்டு காந்தி' யெனப் புகழ் பெற்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் வழி நடக்கும் எனக்கு அப்பெரியவர்களின் இலட்சியங்களையே உருவமாகக் கொண்ட 'துரை' என்ற பாத்திரத்தை ஏற்று நடிக்கும் வாய்ப்பு கிடைத்ததை ஒரு நற்பாக்கியமாகவே கருதுகிறேன்.

மக்கள் சமுதாயத்தின் நலத்திற்காக நான் மேலும் மேலும் பணியாற்றும் ஆர்வமும் உற்சாகமும் கொண்டு தொடர்ந்து செயலாற்றுவேன் என்று இந்த நல்ல நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

- ஆதாரம் : நாடோடி மன்னன் வெற்றி விழா மலர், குண்டூசி, திரைஉலகம்.

**வாழ்த்துக்கள்**
**முப்பிறவி எம்.ஜி.ஆர். பக்தர்கள் குழு மற்றும்**
**சென்னை நகர எம்.ஜி.ஆர். பக்தர்கள்**

# இனியும் வெற்றிகள் குவிப்பார் !

- கலைஞர் திரு. மு. கருணாநிதி

ஆண்டுகள் பன்னிரண்டு ஆயிற் றென்பேன்
மாண்டிடா எண்ணம் மனத்தினில் துள்ள
ஈண்டு ஓர்செய்தி எழுதிட வந்தேன்.
பாண்டுவின் பேரன் கதையினில் நடிக்க,
தோண்டிய தங்கமாய் எம்.ஜி.ஆர் வந்தார்.
ஆண்டுகள் நிலையினும் அரைப்படி உயரமாய்,
தாண்டிய திசையெல்லாம் தரித்திரம் மிதிபட,
பிறரை
வேண்டி வாழ்தல் வேண்டா மெனவே
கூண்டில் இரண்டு புள்ளெனக் கிடந்தோம்;
கூரை வீட்டில்! கோவை நகரில்!
அருளும் அன்பும் உடையவர் அன்னார்
உருளும் துளசி மாலையின் மேன்மை
சொன்னவர் அந்நாள்! துதித்தவர் அந்நாள்!
கதருடைக் காட்சி! கையினில் 'தக்ளி'!
அவருடன் பழகவே அமைந்தது நேரம்
"சுவரிலா ஓவியம் காங்கிரஸ்" என்பேன்;
"நிகரிலாக் கட்சி அதுவே" என்பார்!
"தவறிலா நமது கொள்கை எல்லாம்
எவரையும் பிணைக்க வல்லவை" என்பேன்.
அண்ணா நூல்கள் அனைத்ததையுத் தந்தேன்.
பொன்னே மணியோ வெனப்புழந்தார் அவற்றை!
வென்றது உண்மை! வென்றது தூய்மை!
வென்றது தமிழர் தாயகப் பற்று !!
அறிஞர் காட்டும் பாதையில் சென்றால்
இழந்த தாயகம் மீட்கலாம் என்ற
தெளிந்த எண்ணம் கொண்டார் தோழர்
வளைந்த கொள்கை இகழ்ந்தார்; வளர்ந்தார்!
கலையில் புதுமை! கருத்தில் புதுமை!
வலையில் மானென வீழ்ந்த தமிழர்
நிலையை உயர்த்த நாட்டின் உரிமை
அலையென எழுந்த அணியில் சேர்ந்தார்
"தலையினைத்தருவேன் தாயகம் காக்க
மலையெனக் காண்க தடந்தோள்" எனவே
முழங்கினார் வீரர் முன்னணிப் படையில்!
தயங்கிய தோழரும் திரண்டனர் விரைவில்
திரையில் கூத்தில் தெருவில் மேடையில்
திராவிடர் விடுதலை கீதம் பாடி
சிறையில் நுழைந்து சிந்தை மகிழ்ந்து
பிறையென வளர்ந்து பெருமைகள்பெற்றார்
இயக்கக் கொள்கை இலட்சிய விளக்கம்
மயக்கும் மடமையைக் கொளுத்தும் மார்க்கம்
கலையினிற் காணச் செயல்முறை வகுத்தார்;
அளவிலாப் புகழை அடைந்தார்; உயர்ந்தார்;
அண்ணா தம்பிகள் அனைவரும் வாழ்த்தப்
பொன்னார் விளக்கெனப் புகழ்மாலை ஏறினார்.
கொள்கை வீரராய்த் திகழும் தோழர்
கொள்கை யென்றால் புரிந்தவர் என்பேன்
அன்பும் அறனும் பண்பும் நன்றியும்
என்றும் பிறர்க்கு ஈந்திடும் தன்மையும்
கொண்ட குணமே கொள்கை யென்று
கண்டிடும் நண்பர் கடமை வீரர் !
தென்னகம் வாழ நன்னிலை வர
கன்னல் தமிழில் தீட்டிய காவியம்
மன்னன் ஆட்சியை மக்களுக் காக்கம்
வண்ணப் படமாம் "நாடோடி மன்னனை"த்
தந்த நிகழ்ச்சியைத் தாயகம் மறக்குமோ?
சொந்தக் குடும்பம் பெற்ற பெருமையைச்
சொல்லவும் போமோ? சுவையும் குறையுமோ?
இந்த வெற்றியால் இன்பம் பெற்றோரும்-
இனியும் வெற்றிகள் குவிப்பார் என்றும்-
கனியும் காலம் 'விடுதலைக் கென்றும்
வாழத்துவம் நன்றே! வாழ்த்துவம் நன்றே!!

(நாடோடி மன்னன் வெற்றி விழா மலரில்)

---

# பசுமரத்தாணி

ஒரு கருத்தை, மேடையில் சொல்லும் போது, கேட்டு உணர வாய்ப்பு இல்லாமல் இல்லை. அதேபோல்; எழுத்தில் படிக்கும் பொழுது அறிந்து சிந்திக்கச் சந்தர்ப்பம் இருக்கவே செய்கிறது. ஆயினும்; அதே கருத்தை நாடகம் அல்லது திரைப்பட வாயிலாகச் சொல்லும் போது, மக்களிடையே அது பசுமரத்தாணி போல் பதிந்துவிடுகிறது.

திரு.எம்.ஜி.ஆர்

நடிகன் குரல் - 1962 டிசம்பர் இதழில்

# 'கடவுள் நம்பிக்கை'

நான் ஒரு நாத்திகனா? இல்லவே இல்லை! என்னைப் பலர் தவறாக இப்படிப் புரிந்து கொண்டு, தவறாகவும் எழுதி வருகின்றனர். உண்மையாக நான் ஒரு நாத்திகன் அல்ல! எனக்கு கடவுள் நம்பிக்கை உண்டு ஒருவனே தேவன் என்ற கொள்கையை உடையவன் நான்.

நம் சக்தியை எல்லாம் மீறிய ஒரு பெரிய சக்தி இருக்கிறது. அதைத்தான் கடவுள் என்று சொல்கிறோம், வழிபடுகிறோம். பலர் இந்த சக்திக்கு பல உருவம் கொடுத்து, பெயர்கள் பல தந்து கடவுளாக வணங்கி, வழிபடுகின்றனர்.

நான் என் தாயின் உருவத்தில் அந்தச் சக்தியை இப்போது வழிபட்டு வருகிறேன். அப்படியானால் நான் கோவிலுக்குப் போனது கிடையாதா?

போயிருக்கிறேன்! அங்கிருந்த தெய்வங்களையும் வணங்கியும் இருக்கிறேன்!

'மர்மயோகி' படம், கோவை சென்ட்ரல் ஸ்டூடியோவில் தயாராகி வந்த சமயம், நான் பழனி மலைக்குப் போய், முருகனை தரிசித்து இருக்கிறேன். அப்போது நான் மட்டும் தனியே போகவில்லை.

என்னுடன் என் நண்பர் (நடிகர்) நம்பியாரும் வந்திருந்தார். அவரது மூத்த மகனை நான் என் தோளிலே தூக்கிக் கொண்டு மலைக்குச் சென்றேன். அந்தக் குழந்தைக்கு அன்று நானே பெயரும் சூட்டினேன்.

ஒரு சமயம் ஏழுமலையானை தரிசிக்க கால்நடையாகவே திருப்பதி மலைக்கு சென்று, அவரையும் வணங்கி இருக்கிறேன். இரண்டாவது முறையாக நான் இதே திருப்பதிக்கு சென்றபோதுதான், என் உள்ளத்தில் பெரிய மாறுதல் ஏற்பட்டது. அப்படிப்பட்ட சம்பவம் ஒன்று அன்று அங்கே நடந்தது.

நான் நண்பர்கள் சிலருடன் வாடகைக் காரில் திருப்பதிக்கு சென்றிருந்தேன். வெங்கடாசலபதியைத் தரிசிக்க, ஏராளமான பக்தர்கள் தர்மதரிசன வரிசையில் நின்று கொண்டிருந்தார்கள். பல மைல்கள் நடந்து வந்த களைப்பும், நீண்ட நேரம் தரிசனத்திற்காக காத்திருக்கும் பொறுமை உணர்வும் அவர்களிடம் காணப்பட்டன. நாங்களும் தர்ம தரிசன வரிசையில் போய் நின்று கொண்டோம்.

சற்று நேரத்தில் எங்களுடன் வந்து பிரிந்து போன நண்பர் ஒருவர் எங்களிடம் வந்தார். வரிசையிலிருந்து பிரிந்து தன்னுடன் வரும்படி அவர் எங்களையெல்லாம் அழைத்தார். நாங்களும் வெளியே வந்தோம்.

ஆவலுடன் நான் அவரிடம், ''இப்போது எங்கே போகிறோம்?'' என்று கேட்டேன்.

